Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 18-8-2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 18-08-2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள் :

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அடுத்த மாதம் 17ஆம் தேதி புதுடெல்லியில், 5ஆவது செமிகான் இண்டியா மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி குறித்து, 405 பொருட்கள் அடங்கிய புதிய பட்டியல் ஒன்றை, பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விருதுகளை, மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது.

புதுச்சேரியில், பாதாளச் சாக்கடைக் கால்வாய்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தப்படுத்தும் பணிகள், சோதனை அடிப்படையில் இன்று தொடங்கி உள்ளன.

செமிகான் மாநாடு -1 (6)

புதுடெல்லியில் அடுத்த மாதம் 17ஆம் தேதி முதல், 3 நாட்களுக்கு நடைபெற உள்ள, 5ஆவது செமிகான் இண்டியா மாநாட்டை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொடக்கி வைக்கிறார். அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு செமி

கண்டக்டர் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுக்கு இடையிலான வட்டமேசை கூட்டத்திற்கும் அவர் தலைமை ஏற்கிறார். மாநாடு குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

செமிகான் மாநாடு -2 (15)

(வாய்ஸ்)

செமிகான் இண்டியா மாநாட்டில், 40க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, சுமார் 240 நிறுவனங்களும், 500 காட்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர். மாநாட்டுக் கண்காட்சியில், ஜப்பான், தென்கொரியா, மலேஷியா, ஜெர்மனி உள்ளிட்ட 6 நாடுகளின் சர்வதேச அரங்குகளும் இடம் பெற உள்ளன. இந்தியாவில், நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய, வலுவான, நீடித்த செமி கண்டக்டர் சூழல் ஒன்றை உருவாக்குவதில், அரசின் முற்போக்கு கொள்கைகள் மற்றும் திட்டங்களின் பங்கை வலியுறுத்தும் வகையில், செமிகான் இண்டியா மாநாடு அமையும் என, மத்திய தகவல் – தொழில்நுட்பத் துறைச் செயலர் திரு. எஸ்.கிருஷ்ணன், இன்று புதுடெல்லியில். செய்தியாளர்களிடம் தெரிவித்தார். செமி கண்டக்டர் துறையில், வளர்ச்சி மற்றும் புதுமையாக்க முயற்சிகளின் வேகத்தை, பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் அதிகரிப்பது குறித்து, குழு விவாதங்கள், மற்றும் ஆலோசனை அரங்குகள் இம்மாநாட்டில் இடம் பெற உள்ளன. செமி கண்டக்டர் துறையில், மகளிர் தலைமைத் துவத்தை மேம்படுத்துவது குறித்து, தனி அமர்வு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ராஜ்நாத் (16)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில், அபராஜிதா – பராங் லா 2026 என்னும் அகில இந்திய மகளிர் மலையேற்றப் பயணத்தை, கொடியசைத்து தொடக்கி வைத்தார். ஹிமாச்சலப் பிரதேசத்தின், ஸ்பித்தி பள்ளத்தாக்கில் இருந்து, லடாக்கில் உள்ள சாங்தாங் வரையிலான இந்த 250 கிலோமீட்டர் சாகசப் பயணத்தில், முப்படைகள் சார்ந்த 28 NCC மாணவிகள், 3 அதிகாரிகளுடன் இணைந்து பங்கேற்றுள்ளனர். இந்த 30 நாள் பயணம், இந்திய இளம் பெண்களின் துணிச்சல், மனஉறுதி மற்றும், அபாரத் திறன்களை வெளிப்படுத்துவதாக அமையும் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறினார். இளம் தலைமுறையினர் இடையே, தலைமைப் பண்பை வளர்க்கவும், மன ரீதியிலான நெகிழ்வுத் தன்மையை வலுப்படுத்தவும், ஒழுங்கு கட்டுப்பாட்டை மேம்படுத்தவும், இத்தகைய பயணங்கள் உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். இந்த சாகச பயணத்தில் ஈடுபடும் மாணவிகள், தங்களின் பாதுகாப்பிற்கும், சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும், பயணத்தின் போது உள்ளூர் சமூகத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பாதுகாப்பு உற்பத்தி (17)

பாதுகாப்புத் துறைக்குத் தேவையான எந்தெந்தப் பொருட்களை, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கலாம் என்பது குறித்து, பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள 6ஆவது பட்டியலில், மேலும் 405 பொருட்கள் இடம் பெற்றுள்ளன. இப்பொருட்களை இந்தியாவிலேயே தயாரிப்பதால், மொத்தம் 3 ஆயிரத்து 70 கோடி ரூபாய் அளவிற்கு, வர்த்தக வாய்ப்புகள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், பாதுகாப்பு உற்பத்தித் துறையில், சுயசார்பை எட்டுவதற்கான மற்றொரு முக்கிய நடவடிக்கையாக புதிய பட்டியல் திகழும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பட்டியல் குறித்த முழு விவரங்கள், பாதுகாப்பு அமைச்சகத்தின் ஸ்ரீஜன் இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளன. 2020ஆம் ஆண்டு இந்த இணைய தளம் தொடங்கப்பட்டது முதல், இதுவரை, பாதுகாப்புத் துறைக்குத் தேவையான 33 ஆயிரத்துக்கும் அதிகமான பொருட்கள், உள்நாட்டு உற்பத்திக்கு ஏற்றதாக அறிவிக்கப்பட்டு, இதில் 15 ஆயிரத்து 700 பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி, ஏற்கனவே தொடங்கி உள்ளது. இதனால் கடந்த 5 ஆண்டுகளில் இத்தகைய பொருட்களின் இறக்குமதிச் செலவு, சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு குறைந்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

## பிரிக்ஸ் (17)

பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்களுக்கு இடையிலான, 12ஆவது கூட்டம், மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர்

திரு. பூபேந்திர யாதவ் தலைமையில், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், இன்று நடைபெற்றது. மனித குலத்திற்கே முதலிடம் என்ற அடிப்படையில், புவிக் கோளத்தின் நீடித்த தன்மையை மேம்படுத்துவதில், கொள்கை, தொழில்நுட்பம், மற்றும், மக்கள் பங்கேற்பை ஒருங்கிணைத்து பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் தமது உரையில் வலியுறுத்தினார். 2005ஆம் ஆண்டிற்கும், 2022ஆம் ஆண்டிற்கும், இடையிலான காலத்தில், இந்தியாவில், மாசுபாட்டின் தீவிரம், 37 சதவிகிதம் குறைந்து இருப்பதாகவும், நாட்டின் மொத்த மின்சார உற்பத்தித் திறனில், தூய எரிசக்தி ஆதாரங்களின் பங்கு, 50 சதவிகிதத்தை விட அதிகம் என்றும் அவர் தெரிவித்தார். சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பாக, பிரிக்ஸ் நாடுகளில் பயன்படுத்தப் படும், திறம்பட்ட நடைமுறைகள், மற்றும், புதுமைப் படைப்புகள் குறித்த 4 தகவல் தொகுப்புகளையும், அமைச்சர் இக்கூட்டத்தில் வெளியிட்டார். பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையிலான சுற்றுச் சூழல் பணிக் குழுக் கூட்டங்களில் இடம் பெற்ற விவாதங்களின் அடிப்படையில், இத்தொகுப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன.

நட்டா சிகிச்சை (5)

மத்திய சுகாதார அமைச்சர் திரு. J.P. நட்டா, நேற்று புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில், ஆஞ்ஜியோ - பிளாஸ்ட்டி சிகிச்சை எடுத்துக் கொண்டதைத் தொடர்ந்து, இன்று அவரது உடல்நிலை சீராக உள்ளது. அவர் தற்போது மருத்துவமனையின் இருதய நோய் சிகிச்சைப் பிரிவில்,

மருத்துவ கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளதாக, மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விளையாட்டு விருது -1 (2)

2025ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விருதுகளை, மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

விளையாட்டு விருது-2 (10)

(வாய்ஸ்)

இந்தியாவின், முன்னணி பேட்மிண்டன் இணை திரிசா ஜோலி – காயத்ரி கோபிசந்த், மற்றும், வேறு 15 விளையாட்டு வீரர்கள், அர்ஜுனா விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். முதுபெரும் கால்பந்து வீரர் ஐ. அருமை நாயகம், வாழ்நாள் சாதனைக்கான அர்ஜுனா விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். தடகளப் பயிற்சியாளர் பர்வீர் சிங், குத்துச் சண்டை பயிற்சியாளர் சோடேலால் யாதவ், துப்பாக்கிச் சுடுதல் பயிற்சியாளர் நேஹா நந்தகுமார் சவான் ஆகியோர், துரோணாச்சாரியா விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்கு, சிறப்பாக பாடுபட்டதற்கான ராஷ்ட்டிரிய கேல் புரோத்சாஹன் விருது, புனேயில் உள்ள ராணுவ பாராலிம்பிக் மையத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

மல்லாடி (11)

புதுச்சேரியில், சோதனை அடிப்படையில், நவீன இயந்திரம் மூலம் பாதாளச் சாக்கடைக் கால்வாய்களை சுத்தப்படுத்தும் பணிகளை, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், தற்காலிக சபாநாயகர் திரு. அன்பழகன் ஆகியோர் இன்று தொடக்கி வைத்தனர். இப்பணிகளை தொடர்ந்து கிடைக்கும் பின்னூட்டத்தின் அடிப்படையில், புதுச்சேரியின் அனைத்து 4 பகுதிகளுக்கும் தேவையான எண்ணிக்கையில் இயந்திரங்கள் வாங்கப்படும் என, திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் பின்னர், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். புதுச்சேரியில், குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணத் தேவையான திட்டங்கள் குறித்து, அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என்றும், செப்டம்பர் 1 , 2 ஆகிய தேதிகளில், மத்திய ஜல்சக்தி அமைச்சரை தாங்கள் சந்தித்து, இதுகுறித்து பேச இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்பழகன் (12)

புதுச்சேரியில் நாளை, புதிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைக்க உள்ளதாக, தற்காலிக சபாநாயகர் திரு. அன்பழகன் தெரிவித்துள்ளார். இன்று சட்டப்பேரவை வளாகத்தில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுச்சேரி சட்டப் பேரவையில், தமிழ்த் தாய் வாழ்த்துக்கு முன்னுரிமை

அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில், சபாநாயகர் தேர்தலை நடத்துவது குறித்து, கடந்த ஜுன் 24ஆம் தேதி, துணைநிலை ஆளுநருக்கு கடிதம் அனுப்பப் பட்டதாகவும், இதுவரை அதற்கு பதில் வரவில்லை என்றும் அவர் கூறினார். பதில் அளிக்கும்படி ஆளுநரை வலியுறுத்த முடியாது என்றும், நிரந்திர சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கும் வரை, அப்பதவிக்கு உரிய எல்லா அதிகாரங்களும், தற்காலிக சபாநாயகருக்கு உண்டு என்றும், திரு. அன்பழகன் குறிப்பிட்டார்.

வானிலை (14)

இன்றும்-நாளையும், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரியில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களின், ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதரப் பகுதிகள் மற்றும் காரைக்கால் பகுதியில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 24ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்

பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, மதுரை மாவட்டம் சிட்டம்பட்டி உள்ளிட்ட இடங்களில், 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட் (9)

இந்தியா – இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாளான இன்று, ஆட்ட நேர இறுதி வரை, இலங்கை அணி, தனது 2ஆவது இன்னிங்ஸில், ---------- விக்கெட் இழப்பிற்கு, ---------- ரன் எடுத்து இருந்தது. முன்னதாக இந்திய அணி, 193 ரன்னுக்கு, 2ஆவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்தது. முதல் இன்னிங்ஸ் ஸ்கோர், இந்தியா - 462 ரன். இலங்கை -284 ரன்.

இன்றைய ஆட்டத்தில், இந்திய அணியின் ரிஷப் பந்த், டெஸ்ட் போட்டிகளில் 100 சிக்ஸர் அடித்த முதல் இந்திய வீரராகவும், உலக அளவில் இத்தகைய 4ஆவது வீரராகவும் மேம்பட்டு சாதனை படைத்துள்ளார்.

பேட்மிண்டன் (6)

புதுடெல்லியில் நடைபெறும், BWF உலக பேட்மிண்டன் சாம்பியன் பட்டப் போட்டிகளின், மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் உன்னதி

ஹூடா, மியான்மர் வீராங்கனையைத் தோற்கடித்து, 2ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளார். ஆடவர் பிரிவில் இன்று மாலை நடைபெறும் முதல் சுற்றுப் போட்டியில், இந்திய வீரர் லட்சயா சென், ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த காலின்ஸ் ஃபிலிமோனுடன் மோதுகிறார்.

ஆதார் (13)

இந்திய தனி அடையாள ஆணையம் நாடு முழுவதும் 2 கோடிக்கும் மேற்பட்ட பள்ளி குழந்தைகளின் ஆதார் விவரங்களை புதுப்பித்து, இதற்கான தேசிய இயக்கத்தில், முக்கிய மைல் கல் ஒன்றை எட்டியுள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கப்பட்ட இந்த இயக்கத்தின் கீழ், இதுவரை, 1 லட்சத்து 56 ஆயிரம் பள்ளிகளில், ஆதார் விவரங்களை புதுப்பிக்கும் சேவை குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 7 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, இந்த சேவைக்கான கட்டணமும், கடந்த அக்டோபர் மாதம் முதல் ஓராண்டு காலத்திற்கு, ரத்து செய்யப் பட்டுள்ளது. குழந்தைகளின் ஆதார் பதிவை, 5 வயதில் ஒருமுறையும், 15 வயதில் மற்றொரு முறையும், புதுப்பித்தல் கட்டாயமாகும். அவ்வாறு புதுப்பிக்கத் தவறினால், எதிர்காலத்தில் அரசுத் திட்டங்களின் பலன்களை பெறுவதும், பல்கலைக் கழகத் தேர்வுகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு பதிவு பெறுவதும் கடினமாகலாம் என, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கேரளம் – கப்பல் (8)

கேரளத்தில் கடந்த ஆண்டு மே மாதம் திறந்து வைக்கப்பட்ட விழிஞ்ஞும் கடல் துறைமுகத்தில், நேரடி ஏற்றுமதி – இறக்குமதி செயல்பாடுகள், இன்றுமுதல் தொடங்கி உள்ளன. துறைமுகத்தில் இன்று நடைபெற்ற விழாவில், ஐரோப்பாவிற்கான 2 சரக்கு பெட்டகங்களை, கேரள முதலமைச்சர் திரு. சதீசன், கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்திய சரக்குகள் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று சேர, இதுவரை சுமார் 2 மாதங்கள் தேவைப்பட்ட நிலையில், இனி இது, 28 நாட்களாக குறையும் என, துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள் :

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அடுத்த மாதம் 17ஆம் தேதி புதுடெல்லியில், 5ஆவது செமிகான் இண்டியா மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி குறித்து, 405 பொருட்கள் அடங்கிய புதிய பட்டியல் ஒன்றை, பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விருதுகளை, மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது.

புதுச்சேரியில், பாதாளச் சாக்கடைக் கால்வாய்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தப்படுத்தும் பணிகள், சோதனை அடிப்படையில் இன்று தொடங்கி உள்ளன.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / KR / RK